முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 01.12.2025

O.S No. 84/2015

வா.சா.1-மேரி நிர்மலா

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் பட்டிகை சொத்தின் சர்வேஎண் பி6/48 ஆகும். நான் ஏற்கனவே 1ம் பிரதி மீது பாக்ப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு சொத்து மேற்படி பாக வழக்கில் ஒரு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. எவ்வளவு பாகம் கேட்டுள்ளேன் என்றால் தெரியாது. எனது அம்மாவும் 1 ம் பிரதியும் அந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன்.

வழக்கு சொத்தின் உரிமையாளர் கோட்டார் ஏழுலுர் செட்டு தேசிய விநாயக டிராஸ்ட் என்றால் சரி. எனது அப்பா வழக்கு சொத்தை தரை வாடகைக்கு டிரஸ்டிடம் இருந்து குத்தகைக்கு எடுத்திருந்தார் என்றால் சரி. நான் இதுவரை அந்த டிரஸ்டிற்கு தரை வாடகையை நான்இதுவரையிலும் செலுத்தவில்லை என்றால் சரி. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் டிரஸ்ட் கொடுக்கும் ரசீது என்றால் சரி. அந்த ரசீது பி,வா,சா ஆ 4 ஆகும். வழக்கு சொத்திற்கு என் அண்ணன் பெயரில் உள்ள ஆவணத்தை காட்டுகிறார்கள். என் அப்பா பெயரில் இருந்து என் அண்ணன் பெயருக்கு மாற்றியுள்ளார்கள். எப்போது என்று எனக்கு தெரியாது.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1வது பிரதிவாதி பெயரில் டிரஸ்ட் பெயர் மாற்றம் செய்ததற்கான ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா உயிருடன் இருக்கும் காலத்திலேயே 03.06.2014 ம் தேதி எனது அண்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மனு கொடுத்து எனது அண்ணன் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது என்றால்

எனக்கு தெரியாது. எனது அப்பா 17.03.2015 ல் இறந்தார்.

எனது அப்பா இறந்ததை எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு மோட்சவிலக்கு போட்டதை எனக்கு சொல்லவில்லை. எனது அப்பா வீட்டிற்கு என்னை அனுமதிக்கமாட்டார்கள். எனது அண்ணன் என்னை அனுமதிக்கமாட்டான். எனது அப்பா மரணத்தையும் மோட்சவிலக்கு நிகழ்வுகளில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மரணத்திற்கு எனது சித்தப்பா மூலம் தகவல் கிடைத்தது. நான் சென்றேன். மோட்சவிலக்கிற்கு எனக்கு தகவல் கிடைக்கவில்லை நான் செல்லவில்லை. அசிசி சர்ச்ல் வைத்து எனது அப்பாவின் இறுதி சடங்கு நடந்தது என்றால் சரி.

அந்த இறுதி சடங்கு இறுதியாக கோயிலில் வைத்து மோட்ச விலக்கின் தேதி அறிவிக்கப்படும் என்றால் சரி. மற்றபடி மோட்சவிலக்கிற்கு தனிதனியாக அழைக்கமாட்டார்கள் என்றாலும், தகவல் சொல்லமாட்டார்கள் என்றாலும் சரிதான். மோட்சவிலக்கு அன்றைக்கு சர்ச்சில் பிராத்தனை செய்வார்கள் என்றால் சரி. அந்த பிராத்தனையில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரி.

இந்த வழக்கை நான் எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 20.03.2015 ஆகும். எனது அப்பா இறந்த பின் 3 நாட்களில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரி. சென்னையில் எனது குடும்பத்துடன் தங்கி பணிபுரிந்த போது எனது அப்பாவிற்கு கடிதம் எழுதினேன் என்றால் சரி. எந்த வருடத்தில் கடைசியாக கடிதம் எழுதினேன் என்றால் ஞாபகம் இல்லை.. பிவா.சாஆ 2 கடிதங்கள் அனைத்தும் நான் சென்னையில் வசித்தபோது எழுதிய கடிதங்கள் என்றால் சரி.

10.07.2002 ல் கடைசியாக எழுதிய கடிதம் என்றால் தேதி எனக்கு தெரியாது. இந்த பட்டிகை சொத்திலிருந்து என்னை சட்டத்திற்கு புறம்பாக பலவந்தமாக மாற்றக்கூடாது என்று இந்த வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரி. 1 ம் பிரதிவாதி வழக்கு

சொத்தில் நான் காலி செய்ய வழக்கறிவுப்பு செய்தார் என்றால் இல்லை. வழக்கு சொத்தை காலி செய்ய 1 ம் பிரதிவாதி எதிர் கோருரிமை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதி தாக்கல் செய்த வழக்கை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் .தற்போது ஞாபகம் இல்லை. எனது அண்ணனுடன் எனது அப்பா வசித்த வீடு எங்குள்ளது என்றால் பட்டிகை சொத்திற்கு கிழக்கே உள்ளது. அந்த வீட்டின் கதவு எண் 424 ஆகும்.

வழக்கு சொத்தின் கதவு எண் 423 என்றால் சரி. எனது அம்மாவை கடைசியாக எத்தனை வருடத்திற்கு முன்பாக பார்த்தேன் என்றால் சுமார் 10 வருடங்கள் இருக்கும் . எனது அம்மாவிற்கு தற்போது வயது சுமார் 90 க்கு அதிகமாக இருக்கும். எனது அம்மாவை 1 ம் பிரதி பராமரித்து வருகிறார் என்றால் சரி. எனது அம்மா சர்ச்சில் முக்கிய நிகழ்வுகளுக்கு சென்று வருகிறார் என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த பாக வழக்கில் எனது அம்மா சொத்தையும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. வழக்கு சொத்தில் மின்சார இணைப்பு, தண்ணீர் இணைப்பு உண்டு என்றால் சரி. அது எனது அப்பா பெயருக்கு இருந்தது அவர் இறந்த பின்பு எனது அணன்ன் பெயருக்கு மாறியது . மேற்படி வரிகளை எனது அண்ணன் பெயரில் நான் செலுத்த வருகிறேன்.

என்னுடைய ஒரே மகன் திருமணம் முடித்து திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார் என்றால் சரி. எனது அப்பா எழுதிக்கொடுத்த புத்தேரியில் உள்ள இடத்தில் வீடு வைத்து யார் குடியிருக்கிறார்கள் என்றால் நாங்கள் குடியிருக்கிறோம் வாடகைக்கு விடவில்லை. வழக்கு சொத்தில் வாடகைக்கு யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை.

எனது கணவர் பெயருக்கு நான் எழுதிக் கொடுத்த சொத்தானது புத்தேரியில் எனது அப்பா எனக்கு கொடுத்த சொத்தா, அல்லது குருசடியில் உள்ள சொத்தா, என்றால் புத்தேரியில் உள்ள சொத்தாகும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் பி.வா.சா 5

ஆகும். பிவா.சா-ஆ 5 நான் எந்த வருடத்தில் எழுதிக்கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கிற்கு பின்பாக ஏழுதிக்கொடுத்தேன். குருசடியில் உள்ள அப்பா வீட்டுமனை எத்தனை சென்ட் என்றால் 12 சென்ட் ஆகும். அதை 7,8 வருடங்களுக்கு முன்பாக இந்த வழக்கிற்கு பின்பாக விற்றுவிட்டேன். புத்தேரியில் உள்ள இடத்தின் வீஸ்தீரணம் எவ்வளவு என்றால் 29 ஏர்ஸ் ஆகும். எனது கணவருக்கு அவரது குடும்ப சொத்துக்களுக்கு பாகம் உள்ளது என்றால் சரி. என்னென்ன சொத்துக்கள் எனது கணவருக்கு வந்தது என்றால் எனக்கு தெரியாது.

எனது அப்பா உயிருடன் இருந்தபோது கிட்டதட்ட 3 கோடிக்கு பெருமானம் சொத்தை எனக்கு எழுதியிருந்தார் என்றால் சரி. அந்த சொத்துக்களை இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகு அனுதாபம் சம்பாதிப்பதற்காகவும், நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காகவும் எனது கணவருக்கு பல சொத்துக்கள் இருந்தும் அவரது பெயருக்கு நான் என்னுடைய சொத்தை எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் நான் சொல்வது போல் வசிக்கவில்லலை என்றாலும் அதில் 1 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் 1ம் பிரதியை கஷ்டப்படுத்துவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிக்கு 1மகனும் 1மகளும் திருமணம் ஆகாமல் உள்ளார்கள்என்றால் சரி. எனது அப்பா இறந்த 3 நாளுக்கு முன்னாடி ஈம காரியங்கள் முடிவதற்கு முன்பாகவே கொடுர எண்ணத்துடன் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது அம்மா தற்போது உயிருடன் இருக்கிறார் என்றால் சரி. எனது அம்மா உயிருடன் இருக்கும் போதே பாக வழக்கு தாக்கல் செய்து இதுபோல பல வழக்குகள் தாக்கல் செய்வதும் வாடிக்ககை என்றால் சரியல்ல. இதே பரிகாரம் கோரி எனது அப்பா மீது அவ.எண் 92/2014 என்ற வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது

திருமண நேரத்தில் எனக்கு செய்யவேண்டிய சீர்வரிசை , நகைகள் செரத்துக்ளை எனது அப்பாவுலம், எனது அண்ணனும் சேர்ந்து நல்லபடியாக செய்துவிட்டார்கள். என்றாலும் இந்த வழக்க போட எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. 20.03.2015 ல் எனது அண்ணன் 1ம் பிரதி என்னை மிரட்டியதாக சொல்வது சுத்த பொய் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா இறக்கும் வரை எனது அண்ஔனன் பராமரித்து வந்தார் என்றால் சரி. நல்ல எண்ணத்துடன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கானது பிரதிவாதியுடன் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.